ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2091/61 - 2018 ඔක්තෝබර් මස 04 වැනි බ්‍රහස්පතින්දා - 2018.10.04

2091/61 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 04 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

திருகோணமலை மாவட்டம், திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலாளர் பிரிவில், 243, உப்புவெளி கிராம அலுவலர் பிரிவில், திருகோணமலை பிரதேச சபை எல்லைக்குட்பட்டதும் நில அளவையாளர் அதிபதியின் 2018.08.10 ஆந் திகதிய எப்.வி.பி. 27, எப்.வி.பி.29 இல் துண்டிலக்கம் 1379, 1896, 1897 இன் 3.3712 ஹெக்டயார், 0.0166 ஹெக்டயார், 0.0632 ஹெக்டயார் விஸ்தீரணமுள்ள பின்வரும் எல்லைகளைக் கொண்ட காணித்துண்டு களின் விபரங்கள் பின்வருமாறு:

**துண்டு இல. 1379 - விஸ்தீரணம்: 3.3712 ஹெக்டயார்.**

வடக்கு: காணித்துண்டு இல. 2; கிழக்கு: காணித் துண்டு இல. 104, 1898 மற்றும் எப்.வி.பி.29; தெற்கு: காணித்துண்டு இல. 2, காணித் துண்டு இல. 104, 1898, 102, காணித்துண்டு இல. 2, எப்.வி.பி. 29 இன் காணித் துண்டு இல. 1896 மற்றும் 102; மேற்கு: காணித் துண்டு இல. 2, வீதி (வீதி அபிவிருத்தி அதிகாரசபை) மற்றும் காணித்துண்டு இல. 2.

**துண்டு இல. 1896 - விஸ்தீரணம்: 0.0166 ஹெக்டயார்.**

வடக்கு: எப்.வி.பி.27 இன் காணித்துண்டு இல. 1378, 2 மற்றும் காணித்துண்டு இல. 102; கிழக்கு: காணித் துண்டு இல. 102; தெற்கு: காணித்துண்டு இல. 102; மேற்கு: காணித்துண்டு இல. 102, எப்.வி.பி.27 இன் காணித் துண்டு இல. 2 மற்றும் 1378.

**துண்டு இல. 1897 - விஸ்தீரணம்: 0.0632 ஹெக்டயார்.**

வடக்கு: எப்.வி.பி.27 இன் காணித்துண்டு இல. 1378 மற்றும் காணித்துண்டு இல. 1898; கிழக்கு: காணித் துண்டு இல. 1898, 1899 மற்றும் காணித்துண்டு இல. 1898; தெற்கு: காணித்துண்டு இல. 102; மேற்கு: காணித்துண்டு இல. 2 மற்றும் எப்.வி.பி. 27 இன் காணித்துண்டு இல. 1378.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில்

அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2018 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 29 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும்படியும்,

அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும் அத் தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2018 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 08 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் முப்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

ஜே. எஸ். அருள்ராஜ்,
பிரதேச செயலாளர்,
பட்டினமும் சூழலும் பிரிவு,
திருகோணமலை.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
பட்டினமும் சூழலும் பிரிவு,
திருகோணமலை,
2018, செத்தெம்பர் 26.

10 - 1115

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.